உண்மைகள் உறங்குகின்றன

ஒரு பேப்பர் ரில் (23 மே-5 ஜூன் 2008) எழுபரிதி அவர்கள் 'சிறி லங்காவின் மனித உரிமை விவகாரம் மேற்கின் கரி சனையும் நம்மவர் சிலரின் பொறுப்பற்றதனமும்' என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரையில், தமிழ் தகவல் நடுவத்தின் 7 மே 2008 திகதியபத்திரிக்கை அறிக்கைபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை வெளியீட்டில், காணாமல் போன வர்கள், கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக தொலைபேசிச் சேவையை இலங்கை அரசா ங்கம் ஏற்படுத்தியிருப்பது ஒரு தேவையான ஆரம்பஅடி என்றும், இந்த அடியெடுப்பை வரவேற்கிறோம் என்றும் நாங்கள் கூறியிருந்தோம்.

ஆழ்ந்த சிந்தனையின் பின்னரும், இலங்கையில் தமிழர் மனித உரிமைப் பாதுகாப்பில் பெரும் அபாயங் களுக்கிடையில் செயலாற்றி வரும் மனித உரிமை நிறுவனங்களுடனும் மனித உரிமை நடவடிக் கையாளர்களுடனும் கருத்துப் பறிமாறிய பின்னருமே பத்திரிகை அறிக்கை வழங்கப்பட்டது அல்லாமல், அவசரப்பட்டு வெளியிடப்படவில்லை.

எழுபரிதி அவர்கள் குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் உட்பட, இலங்கை தொடர்பாகச் செயலாற்றி வரும் அனைத்துலக மனித உரிமை நிறுவனங் களில் பெரும்பாலானவை தமிழ் தகவல் நடுவத்துடன் தொடர்பு கொண்டு, ஆலோசனையும் உதவியும் பெற்று வருகின்றன என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

மனித உரிமைப் பாதுகாப்பு, பிணக்கு முடிவாக்கம் ஆகியவற்றில் மக்கள் நிறுவனங்களின் பங்கு இன்றிய மையாததாகும். சட்ட முறையாகவும் மக்களின் முறை யான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், அதி கார நிலையிலுள்ளோர், முக்கியமாக அரசாங்கங்கள், கடமையாற்றுகின்றனவா என்பதனைக் கண்காணிப்பது மக்கள் நிறுவனங்களின் முக்கிய பங்கு என தமிழ் தகவல் நடுவம் கருதுகின்றது. இக்கருத்தின் அடிப்படையிலேயே பத்திரிகை அறிக்கை வழங்கப்பட்டது.

இலங்கை அரசு, தனது பொறுப்பற்றதன்மையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதையும், மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய தகுந்த இயக்க வமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், இலங்கை அரசாங்கம், மற்றைய அரசாங்கங்கள், அனைத்துலகச் சமூகம் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு வருவது எமது பங்கு.

தற்போதைய இலங்கை அரசாங்கம் சந்தேகத்துக்குரிய வஞ்சனை நிறைந்த நோக்கங்களைக் கொண்டிருந் தாலும், அனைத்துலக மனித உரிமைத் தராதரங்களைக் கடைப்பிடித்து, தனிமனித பாதுகாப்புக்குத் தேவையான இயக்கவமைப்புகளை அது உருவாக்குவதற்கான நிர்ப் பந்தத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதே தமிழ் தகவல் நடுவத்தின் கடமையாகும். இதன் அடிப் படையில், மக்கள் பாதுகாப்பு தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றம், மற்றைய ஐநா நிறுவன ங்கள், ஐநா அங்கத்துவ நாடுகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தமிழ் மக்களின் மனித உரிமைக் கான ஆதரவு திரட்டல் நடவடிக்கைகளில் தமிழ் தகவல் நடுவம் ஈடுபட்டுள்ளது.

இத்திசையில், மனித உரிமை மன்றத்துக்கும், அதன் உலகளாவிய சுழற்சி மறுசீராய்வுக்கும் (Universal Periodic Review) தமிழ் தகவல் நடுவம் சமீபத்தில் அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தது.

தொலைபேசிச் சேவை ஏற்படுத்துதற்கான அறிவிப்பு, பலன் தரக்கூடிய சில அம்சங்களைக் கொண்டுள்ளது என பின்வரும் காரணங்களுக்காகக் கூறலாம்:

1. மனித உரிமை தொடர்பாக ஒரு அரசாங்க அமைச்சைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவித் திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

2. இத்தகைய அறிவிப்பு, அரசாங்கத்தின் மீது அரசியல் அடிப்படையிலும் சட்ட அடிப்படையிலும் பொறுப்புத்தன்மையைச் சுமத்துகின்றது.

3. மக்கள் காணாமற் போவது இலங்கையில் நடைபெறுகின்றது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அரசாங்கம் ஒத்துக் கொண்டுள்ளது.

4. மக்கள் கடத்தல் இலங்கையில் நடைபெறுகின்றது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அரசாங்கம் ஒத்துக் கொண்டுள்ளது.

இதுகாலம் வரை இப்படிப் பொறுப்பேற்காது, குற்றச் செயல்களில் பெருமளவு ஈடுபட்டு வரும் பொலிசி டமும், தகுதியற்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும், சக்தியற்ற ஜனாதிபதி ஆணைக் குழுக்களிடமும், தொடர்ந்து வரும் அரசாங்கங்கள் பொறுப்பைக் கையளித்து, அனைத்துலகச் சமூகத்தை ஏமாற்ற எத்தனித்து வந்துள்ளன.

தொலைபேசிச் சேவையை வரவேற்றாலும், சில செயல்களை மேற்கொள்ளாவிட்டால் இது பயனுள்ள சேவையாக அமையாது என்பதையும், மனித உரிமையைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் கொள்கை மாற்றமாக இது அமையாது என்பதையும் தமிழ் தகவல் நடுவம் பத்திரிகை அறிக்கை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது: (அ) இச்சேவை என்ன வகையிற் செயற்படும் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். (ஆ) தொலைபேசி அழைப்புகள் வெறுமனே பாதுகாப்புச் சேவைகளுக்கும், அரச நிறுவனங்களுக்கும் இணைக்கப்படுமா அல்லது தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படுமா என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். (இ)தொலைபேசியில் தொடர்பு கொள்பவர்களுக்கு எத்தகைய உதவிகள் அளிக்கப்படும் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தமிழ் தகவல் நடுவத்தின் நோக்கத்தையும் செயற்பாடுகளையும் இது தெளிவுபடுத்தும் என நம்புகிறோம். மனித உரிமை, மனிதாபிமான அலுவல்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பேச்சாளரை பெப்ரவரி 2007இல் நியமித்து அவரது பெயரையும் மின் அஞ்சல் விவரத்தையும் வெளியிட்டிருந்தார்கள். அதை நாம் வரவேற்று எமது பத்திரிகை அறிக்கை வாயிலாக பிரசரித்திருந்தோம்.

ஒரு மனித உரிமை இயக்கவமைப்பை ஏற்படுத்தி, மக்களுக்கான பொறுப்புத்தன்மை தங்களுக்கு உள்ளது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் இச்செயற்பாடு அமைந்திருந்ததனால், இது ஒரு தேவையான அடியெடுப்பு என்று கூறியிருந்தோம். அதற்கும் இதேமாதிரியான விமரிசனங்களை விவரம் தெரியாதவர்கள் முன்வைத்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

தமிழ் தகவல் நடுவத்தைப் பற்றியோ அல்லது வேறொரு நிறுவத்தைப் பற்றியோ, ஏன் ஒரு தனி நபர் பற்றியோ மனத்திற் கேற்றபடி விமர்சிக்கு முன் அவ்வவ் நிறுவனங்களை, அல்லது சம்பந்தப்பட்ட தனி மனிதரை நேரடியாகத் தொடர்புகொண்டு கருத்துப்பரிமாறல் செய்த பின் அதைப் பத்திரிகை வாயிலாக பொதுமக்கள் முன் வைப்பதே கட்டுரையாளர்களின் பண்பும் பத்திரிகை களின் தர்மமுமாகும். ஒரு விடயத்தை சரிவர விளக்கம் இன்றி, ஊகங்களின் அடிப்படையில் ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்வதும் குற்றம் சுமத்துவதும் தவிர்ப்பது ஆரோக்கியமானதும், பலன் தரக் கூடிய செயலாகும் என்பது தமிழ் தகவல் நடுவத்தின் நிலைப்பாடாகும்

வை. வரதகுமார் - நிறைவேற்றுச் செயலாளர்

தமிழ் தகவல் நடுவம்

ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறாள் / றான் *ஒரு பேப்பர்*

- அதிசயம் ஆச்சரியம் ஆனால் உண்மை. நம்புங்கள்.
- ஒரு பேப்பரில் ராசி பலன் பகுதி அடுத்த இதழில் ஆரம்பம்
- முக்காலமும் உணர்ந்த திரிஞானி உங்கள் நாள் கோள் நட்சத்திரம் பார்த்து மிகத் துல்லியமாக மிக நுட்பமாக மிகத் தெளிவாகப் பலன் சொல்வார்
- பிறந்த திகதி நட்சத்திரம் ஆணா பெண்ணா பிரச்சினை யாது என்பதையும் குறித்து எழுதுங்கள். திரிஞானியார் பதில் சொல்வார்
- உங்கள் பிரச்சினைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

  திரிஞானி, Oru Paper, 45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ

Energetic Waiter/Waitress Required

For a busy Sri Lankan restaurant in Balham. Excellent English necessary and good rates of pay on offer

Please call ***0772 054 7714***

Tuition for G.C.S.E (A/L)

Mathematics, Statistics & Mechanics.

Group and 'one-to-one' classes by an experienced teacher.

Contact Mob: ***07896 107 956***

Flat in Colombo for Sale

Three Bedroom-Flat, newly furnished at Wellawatte for immediate sale.

Call Tharma on ***07949 219 008*** *or* ***020 8550 0908.***

Priya Restaurant.- 'For Idiyappam'

String Hoppers for Sale.

இடியப்பம் விற்பனைக்கு Ediapapam vitpanaikku /

100 இடியப்பம் £12, 500 இடியப்பம் £50.

Call ***020 8471 5552***, ***020 8520 5552***

Web developer

We are looking for Web Developer to join a small dynamic team to spead head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML,
CSS,
Dreamweaver,
Flash
- Graphic design packages like Adobe photoshop

Knowledge of scripting language is highly desirable.

Please forward your CV to ***info@orupaper.com***

Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

Essential skills:

- XHTML, Javascript and AJAX
MySQL
Apache
PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

Please forward your CV to ***info@orupaper.com***

Tuition for A-Levels, GCSE, Key Stages

Mathematics, Further Maths, Physics

Group and One-to-One Classes by Qualified Engineer, an experienced Teacher.

Contact Mob: ***0798 5680 995***

Gerald & Co.
Professional Immigration & Legal Consultants
www.brit-immigration.org.uk

Life in the UK classes By: **MRS SURESH** BA (Hons)

- ☑ All levels taken
- ☑ Easy method
- ☑ Easy to understand
- ☑ High pass rate
- ☑ Personal coaching
- ☑ Value for money

Mobile: **07932 790 650**
Telephone **020 8646 4800**

GERALD & CO
64 Londom Road, Morden,
SM4 5BE
Location: One minute walk from Morden Tube

பிரித்தானிய ஐரோப்பிய தகவல் ஏடு

தமிழ் ஓலைகள்

www.tamilpages.org

020 8543 2126 / 0771 800 3838/ 0771 800 3839